குடியரசு தமிழ் வாசகம்

651
THE REGISTRAR OF BOOKS
26 DEC 1950
MADRAS
651/4-50



வி. கி. சேஷாத்திரி
பீ.ஏ., எல்.டி.

TB
031 ...
N50
132294

டி. வி. செல்லப்ப சாஸ்திரி & ஸன்ஸ்

குடியரசு தமிழ் வாசகம்

(இரண்டாம் புத்தகம்)

இரண்டாம் வகுப்பு

வீ. கி. சேஷாத்திரி, பீ. ஏ., எல். டி.
சென்னை கல்வி இலாகா

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு ஸன்ஸ்.
மதராஸ்

காபிரைட்] [விலை 6 அணா

First Edition November 1950

TB
031 (2)
N50

தமிழ்நாடு ஆவணக்காப்பக நிலையம்
132294
சென்னை-600 008.

T. V. C. Press, Madras.

முகவுரை

குடியரசு தமிழ் வாசகம் என்னும் இந்நூல் வரிசை தமிழ் நாட்டில் துவக்கப் பள்ளிகளில் பயிலும் சிறுவர் சிறுமியருக்கு உரியது. துவக்கப் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்து வகுப்புக்களுக்கு அரசியலார் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தின்படி இந்நூல் வரிசை எழுதப்பட்டுள்ளது. அந்தந்த நிலையில் குழந்தைகள் தெரிந்து கொள்ள வேண்டிய சொல்லாட்சிப் பெருக்கம் கவனத்தில் இருத்திப் பாடங்கள் இயற்றப்பட்டுள்ளன. மௌன வாசிப்புப் பழக்கம் உண்டாவதற்குத் தேவையான கட்டளைகளும் கதைகளும் சேர்க்கப் பட்டுள்ளன. பாடங்களின் இறுதியில் கடின சொற்களின் பொருள் விளக்கமும், பயிற்சிகளும், வினாக்களும், இலக்கணக் குறிப்புக்களும் சேர்க்கப் பட்டுள்ளன.

இந்நூல் வரிசையைத் தமிழுலகம் ஆதரிக்கும் என்று நம்புகிறேன்.

சென்னை
1.11.50

வீ. கி. சேஷாத்திரி

பொருளடக்கம்

எண்	பாடம்	பக்கம்
	கடவுள் வணக்கம்—நாமக்கல் கவிஞர் ...	1
1.	வாக்கியங்கள். ...	2
2.	குதிரை ஓடுகிறது ...	3
3.	**என்ன வேண்டும்?** ...	4
4.	அடுக்கு மொழிகள் ...	5
5.	சுவைகள் ...	6
6.	நிறங்கள் ...	7
7.	வீடு ...	8
8.	பள்ளிக்கூடம் ...	10
9.	குடும்பம் ...	12
10.	மலர்கள் ...	14
11.	தொழிலாளிகள் ...	17
12.	**கைத்தொழில்**—நாமக்கல் கவிஞர் ...	21
13.	சூரியன் ...	22
14.	பெயர் மறந்த ஈ ...	25
15.	**அது என்ன?** ...	28
16.	வண்டிகள் ...	29
17.	**தங்கையே பார்!**—தேசிக விநாயகம் பிள்ளை ...	32
18.	பழங்கள் ...	33
19.	பருத்திச்செடி ...	36
20.	நூல் நூற்றல் ...	38

எண்	பாடம்		பக்கம்
21.	தேனீ	...	40
22.	**ஆடிப் பாடல்**—யோகி சுத்தானந்த பாரதியார்	...	43
23.	பறவைகள்	...	44
24.	மரங்கள்	...	47
25.	கிராமம்	...	50
26.	மிருகங்கள்	...	52
27.	**பசுவும் கன்றும்**—தேசிக விநாயகம் பிள்ளை	...	56
28.	தாபால் காரன்	...	58
29.	பொங்கல் பண்டிகை	...	61
30.	பயிர்த் தொழில்	...	64
31.	வால் இழந்த நரி	...	67
32.	**கிளி**—தேசிக விநாயகம் பிள்ளை	...	70
33.	ஒற்றுமை	...	71
34.	நமது உடல்	...	74
35.	**உலக நீதி**	...	76
36.	**ஆத்திசூடி**	...	77
37.	**நாட்டு வாழ்த்து**—நாமக்கல் கவிஞர்	...	78



கடவுள் வணக்கம்.

கடவுள் வணக்கம்

1. அல்லா வென்பார் சிலபேர்கள்
அரன் அரி என்பார் சிலபேர்கள்;
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை என்பார்கள்.

2. அந்தப்பொருளை நாம் நினைத்து
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்;
வந்திப்போம் அதை வணங்கிடுவோம்;
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்.

—நாமக்கல் கவிஞர்.

1. வாக்கியங்கள்



இருக்கிறது **இருக்கின்றன**

1. தோட்டத்தில் பூக்கள் இருக்கின்றன.
2. பெட்டியில் புத்தகங்கள் இருக்கின்றன.
3. தொட்டிலில் குழந்தை இருக்கிறது.
4. கூடையில் பழங்கள் இருக்கின்றன.
5. கோவிலுக்கு எதிரில் குளம் இருக்கிறது.
6. குளத்தில் தாமரைப் பூக்கள் இருக்கின்றன.

I. கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை அமை :—

1. தோட்டத்தில் பூக்கள் ———.
2. கூடையில் பழம் ———.
3. பெட்டியில் புத்தகம் ———.
4. கடையில் கடிகாரங்கள் ———.

2. குதிரை ஓடுகிறது

1. குதிரை ஓடுகிறது.
2. தவளை தத்துகிறது.
3. மீன் நீந்துகிறது.
4. சேவல் கூவுகிறது.
5. குரங்கு தாவுகிறது.
6. பூனை பதுங்குகிறது.
7. புலி பாய்கிறது.
8. குழந்தை தவழுகிறது.

I. இரண்டு பக்கங்களிலுள்ள சொற்களைப் பொருத்து.

குரங்கு	தத்துகிறது.	மீன்	பாய்கிறது.
புலி	நீந்துகிறது.	தவளை	ஓடுகிறது.
சேவல்	தாவுகிறது.	குதிரை	கூவுகிறது

II. இந்தப்பாடத்தில் கீழுள்ளது மாதிரி வாக்கியங்களை மாற்றி எழுது :—குதிரை ஓடுகிறது — குதிரைகள் ஓடுகின்றன.

3. என்ன வேண்டும்?

பாப்பா! பாப்பா! என்ன வேண்டும்?
பழம் வேண்டும்.

1.	என்ன பழம்?	வாழைப்பழம்
	என்ன வாழை?	ரச வாழை
2.	என்ன ரசம்?	மிளகு ரசம்
	என்ன மிளகு?	வால் மிளகு
3.	என்ன வால்?	நாய் வால்
	என்ன நாய்?	மரநாய்

4. என்ன மரம்? — பனை மரம்
என்ன பனை? — தாளிப்பனை
5. என்ன தாளி? — விருந்தாளி
என்ன விருந்து? — மணவிருந்து
6. என்ன மணம்? — பூமணம்
என்ன பூ? — மாம் பூ
என்ன மா? — **அம்மா!**

ஒருவன் கேட்க மற்றொருவன் பதில் சொல்லவும்.

4. அடுக்கு மொழிகள்

1. தேங்காய் குலை குலையாகக் காய்க்கும்.
2. பூக்கள் கொத்துக் கொத்தாகப் பூக்கும்.
3. பட்டாசு **படபட** என்று வெடிக்கும்.
4. கமலம் **கலகல** என்று சிரிப்பாள்.
5. கத்தி **பளபள** என்று மின்னும்.
6. சோறு **தளதள** என்று கொதிக்கும்.
7. குப்பன் **குடுகுடு** என்று ஓடுவான்.
8. காற்று **குளுகுளு** என்று வீசும்.

I. வரிசைவரிசையாக, கூட்டங்கூட்டமாக — இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்து எழுது.

II. ஒரு கத்தியைக் 'கத்தி' என்று சொல்லுகிறோம். இரண்டையும் இரண்டுக்கு மேற்பட்டவைகளையும் 'கத்திகள்' என்கிறோம்.

பின்கண்டவைகளில் ஒன்றுக்கு மேற்பட்டவைகளைக் குறிக்கும் சொற்களை எழுது — பூ, தேங்காய், மீன், குதிரை, பூனை, குழந்தை, பழம்.

5. சுவைகள்.

1. மிளகாய் **காரமாக** இருக்கும்.

2. பாகற்காய் **கசப்பாக** இருக்கும்.

3. எலுமிச்சம் பழம் **புளிப்பாக** இருக்கும்.

4. கரும்பு **தித்திப்பாக** இருக்கும்.

5. கடல்நீர் **உவர்ப்பாக** இருக்கும்.

6. பாக்கு **துவர்ப்பாக** இருக்கும்.

சுவைகள் ஆறுவகைப் படும். அவை காரம், கசப்பு, புளிப்பு, தித்திப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்பனவாம். ஒரே சுவையுள்ள

உணவை நாம் சாப்பிடுவதில்லை. நமது உணவில் பல சுவைகள் இருக்கின்றன. 'நாக்கினுல் நாம் சுவைகளை அறிகிறோம்.

I. கோடிட்ட இடங்களை நிரப்பு:

தேன் ——— இருக்கும்.
மாங்காய் ——— இருக்கும்.
கடுக்காய் ——— இருக்கும்.
சுண்டக்காய் ——— இருக்கும்.
நாக்கினுல் ——— அறிகிறோம்.

II. இவற்றின் சுவை என்ன?—மிளகு, வேப்பிலை, மாங்காய், வெல்லம், சுண்டைக்காய்.

6. நிறங்கள்

புல் இரத்தம் நிறம் சாமந்திப்பூ

1. பால் **வெள்ளை** நிறம்.
2. புல் **பச்சை** நிறம்.
3. இரத்தம் **சிவப்பு** நிறம்.
4. வானத்தின் நிறம் **நீலம்.**
5. சாமந்திப்பூ **மஞ்சள்** நிறம்.
6. காக்கை **கறுப்பு** நிறம்.

பச்சை, சிவப்பு, வெள்ளை, மஞ்சள், கறுப்பு— இவை **பஞ்ச வர்ணம்** எனப்படும். பஞ்ச வர்ணம் என்றுல் ஐந்து நிறங்கள்.

கேள்விகள்—

I. பஞ்சவர்ணங்கள் என்னென்ன?

II. சரியாகப் பொருத்தி எழுது:

கிளி	மஞ்சள் நிறம்
மிளகாய்ப்பழம்	வெள்ளை நிறம்
சாக்கட்டி	பச்சை நிறம்
சூரியகாந்திப் பூ	சிவப்பு நிறம்

7. வீடு



சிறிய	முன்னுல்	சுத்தம்
கூரை	பின்னுல்	அழகு
ஜன்னல்	திண்ணை	பூந்தோட்டம்

1. இது என் வீடு.
2. என் வீடு சிறிய வீடு.
3. இது ஒரு கூரை வீடு.

4. இதில் நான்கு ஜன்னல்கள் இருக்கின்றன.
5. வீட்டிற்கு முன்னால் இரண்டு திண்ணைகள் இருக்கின்றன.
6. திண்ணைகளுக்கு முன்னால் பூந்தோட்டம் இருக்கிறது.
7. வீட்டிற்குப் பின்னால் காய்கறித் தோட்டம் இருக்கிறது.
8. எங்கள் வீடு சுத்தமாகவும் அழகாகவும் இருக்கிறது.

I. ஜன்னல், கெஜம், ஜாடி, ஜலம் — இவற்றைப் படி; எழுது. 'ஜ' எழுத்தைத் தெரிந்துகொள்.

II. தெரிந்து கொள்:
முன்னால் × பின்னால்
சிறிய × பெரிய
சுத்தம் × அசுத்தம்

III. கேள்விகள் :
1. திண்ணைகளுக்கு முன்னே என்ன இருக்கிறது?
2. வீட்டுக்குப் பின்னால் என்ன இருக்கிறது?
3. எங்கள் வீடு எப்படி இருக்கிறது?

8. பள்ளிக்கூடம்

எங்கள்	ஆசிரியர்	நாங்கள்
மைதானம்	வேலை	கற்றுக் கொடுக்கிறார்கள்
வகுப்பு	விளையாடு	கற்றுக் கொள்கிறோம்

1. இது எங்கள் பள்ளிக்கூடம்.
2. இதன் முன்புறம் ஒரு தோட்டம் இருக்கிறது.
3. இதன் பின்புறம் ஒரு மைதானம் இருக்கிறது.
4. இந்தப் பள்ளியில் ஐந்து வகுப்புக்கள் இருக்கின்றன.

5. இதில் ஐந்து ஆசிரியர்கள் இருக்கிறார்கள்.
6. தோட்டத்தில் நாங்கள் வேலை செய்கிறோம்.
7. மைதானத்தில் நாங்கள் விளையாடுகிறோம்.
8. ஆசிரியர்கள் எங்களுக்குப் பாடங்கள் கற்றுக் கொடுக்கிறார்கள்.
9. நாங்கள் பாடங்களைக் கற்றுக் கொள்கிறோம்.
10. நாங்கள் நூல்நூற்கவும் கற்றுக் கொள்கிறோம்.

I. கேள்விகள் :

1. உன் பள்ளியில் எத்தனை வகுப்புக்கள் இருக்கின்றன?
2. நீங்கள் தோட்டத்தில் என்ன செய்கிறீர்கள்?
3. நீங்கள் எங்கே விளையாடுகிறீர்கள்?

II. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை எழுது :

1. நாங்கள் ——— விளையாடுகிறோம்.
2. நாங்கள் ——— வேலை செய்கிறோம்.
3. ஆசிரியர்கள் ——— கற்றுக் கொடுக்கிறார்கள்.

9. குடும்பம்.



குடும்பம்	பொருள்	பெற்ருேர்	தைக்கிருள்
தாயார்	சம்பாதிக்கிருர்	வஸந்தா	படிக்கிருர்
தகப்பனுர்	சாமான்	லக்ஷ்மி	போடுகிறேன்
தூங்கு	சமையல்	மோஹன்	நூற்கிருள்.

1. இந்தப் படத்தைப்பார். இவள் என் தாயார். என் தாயார் துணி தைக்கிருள்.

2. இவர் என் தகப்பனுர். என் தகப்பனுர் புத்தகம் படிக்கிருர். என் தம்பி பாடம் படிக்கிருன். நான் கணக்குப் போடுகிறேன்.

3. என் தாத்தா தூங்குகிருர். என் பாட்டி கதை சொல்லுகிருர். அதை என் தங்கையும் தம்பிப் பாப்பாவும் கேட்டுக் கொண்டு இருக்கிருர்கள்.

4. என் அக்காள் நூல் நூற்கிருள். அவள் பெயர் வஸந்தா. என் தங்கையின் பெயர் லக்ஷ்மி. என் பெயர் மோஹன்.

5. என் தகப்பனுர் வேலே செய்து பொருள் சம்பாதிக்கிருர். அவர் வீட்டுக்கு வேண்டிய சாமான்களே வாங்கி வருகிருர். என் தாயார் சமையல் செய்கிருள். நாங்கள் பெற்ருேர் சொல்லும் வேலேகளேச் செய்கிருேம்.

6. எங்கள் குடும்பம் பெரிய குடும்பம். நாங்கள் எல்லோரும் ஒரே குடும்பம்.

I. கேள்விகள்:—

1. தகப்பனுர் என்ன செய்கிருர் ?
2. அக்காள் என்ன செய்கிருள் ?
3. தாத்தா என்ன செய்கிருர் ?
4. தாயார் என்ன செய்கிருள் ?

II. கோடிட்ட இடங்களில் கீழுள்ள சொற்களில் பொருத்தமானவற்றை அமைக்கவும்: தூங்குகிறார், தைக்கிறாள், சம்பாதிக்கிறார், நூற்கிறாள், படிக்கிறான்.

அப்பா ——— தம்பி ———
தாத்தா ——— அக்காள் ———
தாயார் ———

III. வஸந்தா, லக்ஷ்மி, மோஹன்—இவற்றைப் படி. ஸ, க்ஷ, ஹ. இவற்றைத் தெரிந்து கொள்ளவும். ஹனுமார், பக்ஷி, மஹாத்மா, ஸர்ப்பம்: இவற்றைப் படி, எழுது.

10. மலர்கள்.

மணம்	முள்	மல்லிகை
புஷ்பம்	மிதக்கும்	ரோஜா
விரும்பு	அதிகம்	கடவுள்
அரும்பு	பூஞ்செடி	பூஜை
மொக்கு	தாமரை.	

1. மலர்கள் அழகும் மணமும் உள்ளவை. மலர்களைப் பூக்கள் என்றும் புஷ்பங்கள் என்றும் சொல்லுவார்கள்.

2. மலர்களை நாம் எல்லோரும் விரும்புகிறோம். சில பூக்கள் காலையில் மலரும்; சில பூக்கள் மாலையில் மலரும். சில மலர்கள் சிறியவை; சில பெரியவை.

3. புஷ்பச்செடி முதலில் அரும்பு விடும். பிறகு அந்த அரும்பு மலரும். அரும்பை மொக்கு என்றும் சொல்லுவார்கள். மலராத



அரும்பு காய் அரும்பு. சில பூஞ்செடிகளில் முள் இருக்கும்.

4. புஷ்பங்களில் பல வகைகளுண்டு. மல்லிகை மலருக்கு மணம் அதிகம். ரோஜாப்பூ வெகு அழகாக இருக்கும். ரோஜாச் செடியில் முட்கள் உண்டு.

5. தாமரைப்பூ மிகப் பெரியது. அது தண்ணீரின்மேல் மிதக்கும். தாழம்பூ நீளமாக இருக்கும். அதற்கும் மணம் அதிகம்.

6. மலர்களால் மாலைகள் கட்டுவார்கள். மலர்களால் கடவுளுக்குப் பூஜை செய்வார்கள். மலர்களில் பல நிறங்கள் உண்டு. பெண்கள் மலர்களைத் தொடுத்துத் தலையில் சூடிக் கொள்வார்கள்.

I. கேள்விகள்:—

1. மலர்களுக்கு வேறு பெயர்கள் என்ன?
2. பூக்களில் நான்கு வகைகள் சொல்லு.
3. மலர்களால் என்ன உபயோகம்?
4. மிகப் பெரிய பூ எது?

II. தெரிந்துக்கொள்— சிறியவை × பெரியவை
அதிகம் × குறைவு

III. படி— ரோஜாப் புஷ்பம், பட்டு வேஷ்டி, மண்ஜாடி, தமிழ்ப் பாஷை, புஷ்பஹாரம், திராக்ஷைப் பழம், பக்ஷிக் கூடு, ஸர்ப்பராஜா; ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ கற்றுக்கொள்.

IV. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமை:

1. பெண்கள் மலர்களைத் ——— சூடிக்கொள்வார்கள்.
2. மலர்களால் ——— கட்டுவார்கள்.
3. ரோஜாச் செடியில் ——— உண்டு.
4. மலர்கள் ——— உள்ளவை.

11. தொழிலாளிகள்

குடியானவன் முளைத்து சம்மட்டி
பயிர்த்தொழில் தானியங்கள் கொத்தன்
கலப்பை தச்சன் ஒழுங்காக
உழுவான் விட்டம் எழுப்பி
பாய்ச்சி கருவிகள் சேணியன்
நெசவு

1. இவன் ஒரு **குடியானவன்.** குடியானவன் பயிர்த்தொழில் செய்கிறான். இவன் கலப்பையால் வயலை உழுவான். பிறகு வயலுக்கு நீர்பாய்ச்சி விதை விதைப்பான். விதைகள் முளைத்துப் பயிர்கள் தோன்றும். பயிர்களிலிருந்து தானியங்கள் உண்டாகின்றன. இந்தத் தானியங்கள் நமக்கு உணவாகின்றன.



2. இவன் ஒரு **தச்சன்.** இவன் மரச் சாமான்களைச் செய்வான். இவன் பெட்டி,

கலப்பை, மேஜை, நாற்காலி முதலியவைகளைச்

செய்வான். வீடுகளுக்கு வேண்டிய கதவு, விட்டம், ஜன்னல் முதலியவைகளையும் இவன் செய்வான். இவனுடைய கருவிகள் உளி, கொட்டாப்புளி, வாள் முதலியன.

3. இவன் **கருமான்.** கருமான் இரும்புச் சாமான்களைச் செய்வான். இவன் முதலில் இரும்பை நெருப்பில் காய்ச்சுவான். பிறகு அதைச் சம்மட்டியால் அடித்துத் தேவையான பொருள்களைச் செய்வான்.

4. இவன் **கொத்தன்.** கொத்தன் வீடு கட்டுவான். இவன் செங்கற்களை ஒழுங்காக

அடுக்குவான். அவற்றின் மேலே மண் அல்லது சுண்ணும்பு கொட்டுவான். இப்படிச் சுவர் எழுப்பி வீடு கட்டுவான்.

5. இவன் **குயவன்.** குயவன் மண் பாண்டங்களைச் செய்வான். இவனுடைய கருவிகள் சக்கரம், தடி முதலியன. இவன் சட்டி, பானை, கூஜா முதலிய பொருள்களைச் செய்வான்.



6. இவன் சேணியன்.

சேணியன் நெசவு வேலை செய்வான். இவன் துணிகளையும் புடவைகளையும் துப்பட்டிகளையும் நெய்வான்.

I கேள்விகள் :

1. குடியானவன் தொழில் என்ன ?
2. தச்சனுடைய கருவிகள் என்னென்ன ?
3. மண்பாண்டங்களைச் செய்பவன் யார் ?
4. கொத்தனுடைய வேலை என்ன ?

II சரியாகப் பொருத்தி எழுது:—

சேணியன்	வீடு கட்டுவான்
குயவன்	இரும்பு வேலை செய்வான்
கொத்தன்	பயிர்த்தொழில் செய்வான்
கருமான்	மரச்சாமான்கள் செய்வான்
தச்சன்	மண்பாண்டங்கள் செய்வான்
குடியானவன்	துணி நெய்வான்.

12. கைத்தொழில்

1. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்.
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ ?

2. உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் செல்லாது.
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ ?

3. நெசவுக் காரர்கள் நெய்யாமல்
நிலத்தவர் உடைக்கென் செய்வார்கள் ?
குசவன் செய்திடும் பாண்டமன்றோ
குடித்தனம் நடந்திட வேண்டுமென்றும்?

4. கைத்தொழில் தம்மைக் காத்திடுவோம்
கலகம் பற்பல தீர்த்திடுவோம்.
பொய்த்தொழில் யாரும் குறைந்திடவே
பூமியில் நாமே சிறந்திடுவோம் !

—நாமக்கல் கவிஞர்.

13. சூரியன்



தினந்தோறும்	வெப்பம்	கிழமை
உதிக்கிறது	பகல்	கடுமை
மறைகிறது	இரவு	உயிர்வாழ
உச்சி	இருள்	வெளிச்சம்

1. சூரியன் தினந்தோறும் காலை நேரத்தில் உதிக்கிறது. அது மாலை நேரத்தில் மறைகிறது. சூரியன் வானத்தில் தோன்றுகிறது. அது ஒரு நெருப்புப் பந்து.

2. காலையில் சூரியன் சிவந்த பந்து போல் அழகாக இருக்கும். அது நடுப்பகலில் வானத்

தின் உச்சியில் வரும். அப்பொழுது வெப்பம் அதிகமாக இருக்கும். மாலையில் மறையும் பொழுது சூரியன் அழகாக இருக்கும்.

3. சூரிய வெளிச்சம் இருக்கும் காலம் **பகல்.** சூரிய வெளிச்சம் இல்லாத நேரம் **இரவு.** சூரியன் மறைந்ததும் இருள் உண்டாகும். ஒரு இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒரு **நாள்.** நாளைக் **கிழமை** என்றும் சொல்லுவார்கள். ஏழு நாட்கள் கொண்டது ஒரு **வாரம்.** முப்பது நாட்கள் கொண்டது ஒரு **மாதம்.**

4. சூரியன் நமக்கு வெப்பமும் வெளிச்சமும் கொடுக்கிறது. சில காலங்களில் சூரிய வெப்பம் கடுமையாக இருக்கும்; சில காலங்களில் குறைவாக இருக்கும். சூரியனால்தான் மழை பெய்கிறது. சூரிய வெப்பத்தினால் தான் புல், பூண்டுகள் முதலான எல்லாப் பிராணிகளும் உயிர் வாழ்கின்றன. சூரியனால் நாம் திசைகளை அறிகிறோம்.

I. கேள்விகள் :

1. சூரியன் எப்பொழுது உதிக்கிறது ?
2. சூரியன் எப்பொழுது மறைகிறது ?
3. சூரிய வெப்பம் எப்பொழுது அதிகமாக இருக்கும் ?
4. ஒரு வாரத்திற்கு நாட்கள் எத்தனை ?
5. சூரியனால் நமக்கு என்ன உபயோகம் ?

II. எதிர்ப்பதங்களை எழுது :

காலை, பகல், இருள், அதிகம், தோன்றும்.

[தெரிந்து கொள் : சூரியன் உதிக்கும் திசை கிழக்கு; அதுவே உனக்கு முன்புறம்; உனக்குப் பின்புறம் மேற்கு. உன் வலது கைப்பக்கம் தெற்கு ; இடது கைப்பக்கம் வடக்கு.]

III. மௌனமாகப் படித்துச் செய்:

எழுந்து நில். கிழக்குத் திக்கைப் பார்த்து நில். இரண்டு கைகளையும் பக்கத்தில் நீட்டு. வடக்குத் திக்கைக் காட்டு. மேற்கைப் பார்த்து நில். உட்கார்.

IV. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களைப் பொருத்து :

1. சூரியன் ஒரு ——— பந்து.
2. சூரியன் ——— உதிக்கும்.
3. சூரியன் ——— மறையும்.
4. ——— இருக்கும் நேரம் பகல்.
5. சூரியன் ——— நேரம் இரவு.

14. பெயர் மறந்த ஈ

மறந்து	மேய்க்கும்	கனைத்தது
பெயர்	இடையன்	தின்கிறது
வாழும்	சவாரி	கேள்

1. ஒரு ஈ அதன் பெயரை மறந்து விட்டது. அது ஒரு கிளியிடம் சென்றது. "கிளியே! கிளியே!! என் பெயர் என்ன?" என்று கேட்டது. கிளி "எனக்குத் தெரியாது. நான் வாழும் மரத்தைக்கேள்" என்றது.

2. ஈ மரத்தினிடம் சென்றது. "மரமே! மரமே!! என் பெயர் என்ன?" என்று மரத்தை ஈ கேட்டது. மரம் "எனக்குத் தெரியாது. என்னுடைய இலையைக் கேள்" என்றது.

3. ஈ இலையினிடம் சென்றது. "இலையே! இலையே!! என் பெயர் என்ன?" என்று ஈ இலையைக் கேட்டது. இலை "எனக்குத் தெரியாது. என்னை ஒரு ஆடு தின்கிறது. அந்த ஆட்டைக் கேள்" என்றது.



4. பாவம்! ஈ என்ன செய்யும்? ஈ அந்த ஆட்டைப் பார்த்து "என் பெயர் என்ன?" என்று கேட்டது. ஆடு "எனக்குத் தெரியாது. என்னை மேய்க்கும் இடையனைக் கேள்" என்றது.



5. ஈ இடையனிடம் சென்றது. "இடையா! இடையா!! என் பெயர் என்ன?" என்று கேட்டது. இடையன் "நான் சவாரிசெய்யும் குதிரையைக் கேள்" என்றான்.



6. ஈ குதிரையைப் பார்த்து "என் பெயர் என்ன? சொல்லு" என்று கேட்டது. குதிரை "எனக்குத் தெரியாது. என் குட்டியைக் கேள்" என்றது.

7. ஈ "குதிரைக் குட்டி! குதிரைக் குட்டி!! என் பெயர் என்ன?" என்று கேட்டது. குதிரைக் குட்டி 'ஈ ஈ ஈ ஈ.' என்று கனைத்தது!

I. இந்தக் கதையை நாடகத்தில் நடித்துக் காட்டு.

II. கேள்விகள்:

1. ஈ என்ன கேட்டது?
2. ஈ யார் யாரிடம் சென்று கேட்டது?
3. ஈக்கு அதன் பெயர் எப்படித் தெரிந்தது?

15. அது என்ன?

பணம் குழி மண்டபம் தோப்பு வைக்கோல் உடைந்தது
முள்ளு மூச்சு முட்டை நெஞ்சு அண்ணாந்து வைரம்.

1. கை உண்டு; கால் இல்லை.
கழுத்து உண்டு; தலை இல்லை.
பை உண்டு; பணம் இல்லை.
நெஞ்சு உண்டு; மூச்சு இல்லை.
அது என்ன?

2. ஆழக் குழி வெட்டி,
அதில் ஒரு முட்டை வைத்து,
அண்ணாந்து பார்த்தால்
அநேகம் முட்டை!
அது என்ன?

3. ஆயிரம் பேர் தச்சர் கூடி
அழகான மண்டபம் கட்டி
ஒருவன் கண் பட்டு
உடைந்ததாம் மண்டபம்.
அது என்ன?

4. முள்ளு முள்ளுக்குள்ளே
முந்திரித் தோப்புக்குள்ளே
வைக்கோல் போருக்குள்ளே
கண்டெடுத்தேன் வைரமணி.
அது என்ன?



16. வண்டிகள்

ஏற்றலாம்	வேகமாக	உதவி	உபயோகம்
மெதுவாக	பிரயாணம்	தூரமான	
மற்றொன்று	இயந்திரம்	சீக்கிரம்	



1. இது ஒரு கை **வண்டி**. இதை மனிதன் இழுப்பான். இதில் மூட்டைகளையும் சாமான்களையும் ஏற்றலாம்.

2. இது **மாட்டு வண்டி**. இது மெதுவாகப் போகும். இதை மாடு இழுக்கும். இதன் மேலே கூண்டு இருக்கும். மாட்டு வண்டிகளில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று **ஒற்றை**மாட்டுவண்டி; மற்றொன்று **இரட்டை** மாட்டு வண்டி.

3. இது **குதிரைவண்டி**. இதைக் குதிரை இழுக்கும். குதிரை

வண்டி வேகமாக ஓடும். அதிக தூரமில்லாத இடங்களுக்கு இதில் பிரயாணம் செய்யலாம்.



4. இது **மோட்டார் வண்டி**. இது இயந்திரத்தின் உதவியால் ஓடுகிறது. இது மிகவும் வேகமாகப் போகும். இதை ஓட்டுவதற்குப் பெட்ரோல் என்ற எண்ணெய் வேண்டும்.

5. இது **புகை வண்டி**. இதை **இரயில் வண்டி** என்றும் சொல்லுவார்கள். இது இரும்புத் தண்டவாளங்களின் மேல் ஓடும். இதில் தூரமான இடங்களுக்கு வெகு சீக்கிரம் போகலாம்.



6. வண்டிகள் நமக்குப் பல வகைகளில் உபயோகப்படுகின்றன. இவைகளில் சாமான்

களை ஏற்றிக்கொண்டு போகலாம்; நாமும் பிரயாணம் செய்யலாம்.

I. கேள்விகள்:—

1. கை வண்டியை இழுப்பது யார்?
2. மாட்டு வண்டிகளில் எத்தனை வகைகள் உண்டு? அவை என்ன?
3. குதிரை வண்டியினால் உபயோகம் என்ன?
4. மோட்டார் வண்டியை ஓட்டுவதற்கு என்ன வேண்டும்?
5. புகை வண்டி எதன் மேல் ஓடும்?
6. வண்டிகளால் உபயோகம் என்ன?

II. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைக்கவும்

1. கை வண்டியை ———இழுப்பான்.
2. மாட்டு வண்டி———போகும்.
3. குதிரை வண்டி———ஓடும்.
4. மோட்டார் ஓட்டுவதற்குப்———வேண்டும்.
5. புகை வண்டி———ஓடும்.

III. எதிர்ப்பதங்களை எழுதுக:-

ஏற்று, வேகமாக, வேண்டும், சீக்கிரம், மேலே.

IV. இன்று, நாளை, நேற்று -இவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுது.

17. தங்கையே பார்!



1. தங்கையே பார்! தங்கையே பார்!
   ஸைக்கிள் வண்டி இதுவே பார்!
   சிங்காரமான வண்டி
   சீமையிலே செய்த வண்டி.

2. இரும்பாலே செய்த வண்டி,
   எங்கெங்கும் ஓடும் வண்டி.
   மாடில்லை குதிரையில்லை
   மாயமதாய்ப் பறந்திடும் பார்!

3. தீயில்லை புகையுமில்லை
   தீவிரமாய்ச் சென்றிடும் பார்!
   காலாலே மிதிப்பதனுல்
   கடும் விசையில் போயிடும் பார்!

4. ஒன்றின் பின் ஒன்றாக
உருளும் பைதாக்களைப் பார் !
அக்காளும் தங்கையும் போல்
அவை போகும் அழகைப் பார் !

—தேசிக விநாயகம் பிள்ளை.

18. பழங்கள்.



இனிப்பாக	உண்பது	மணம்	முக்கியமானது
எளிதில்	புசித்தல்	ஏழை	நோய்
மலிவு	சுளைகள்	அடிமரம்	சீப்புச் சீப்பாக

1. மேலேயுள்ள படத்தைப் பாருங்கள். அதில் என்னென்ன பழங்கள் இருக்கின்றன ? அதில் வாழைப்பழம், கொய்யாப்பழம், பலாப்

பழம், மாம்பழம், திராக்ஷைப்பழம், மாதுளம் பழம் முதலிய பழங்கள் இருக்கின்றன. இந்தப் பழங்கள் எல்லாம் இனிப்பாக இருக்கும்.

2. மா, பலா, வாழை முதலிய பழங்கள் மரங்களிலிருந்து கிடைக்கின்றன. சில பழங்கள் செடிகளில் இருந்து கிடைக்கின்றன; மாதுளை செடியிலிருந்து கிடைக்கிறது. திராக்ஷை கொடிகளில் இருந்து கிடைக்கிறது.

3. நாம் சாப்பிடும் பழங்களில் **மா, பலா, வாழை** முக்கியமானவை. வாழைப்பழம் வாழை மரத்தில் உண்டாகிறது. அதன் நிறம் மஞ்சள். வாழைக்குலையில் பழங்கள் சீப்புச்சீப்பாகஇருக்கும். வாழைப்பழம் நல்ல சுவையும் மணமும் உள்ளது. ஏழைகளுக்கும் இது எளிதில் கிடைக்கும். இதன் விலை மலிவு. இதில் பலவகைகள் உண்டு.

4. மாம்பழம் மாமரத்தில் உண்டாகிறது. இதில் பல வகைகள் உண்டு. சில மாம்பழங்கள் இனிப்பாக இருக்கும்; சில புளிக்கும்.

5. பழங்களில் பெரியது பலாப்பழம். இது பலாமரத்தின் கிளைகளிலும் அடிமரத்திலும் உண்டாகும். பலாப்பழத்தின் மேல்தோல்

கெட்டியாகவும் முள்ளு முள்ளாகவும் இருக்கும். பலாப்பழத்தின் உள்ளே சுளைகள் இருக்கும். சுளைகள் இனிப்பாக இருக்கும்.

6. பழங்கள் உண்பது உடம்புக்கு நல்லது. ஆனால் அழுகின பழங்களையும் காய்களையும் உண்ணக்கூடாது. புசித்தால் நோய் உண்டாகும்.

I. கேள்விகள்:—

1. மரங்களில் உண்டாகும் பழங்கள் எவை?
2. செடிகளில் உண்டாகும் பழங்கள் எவை?
3. எளிதில் கிடைக்கும் பழம் எது?
4. பலாப்பழத்தின் மேல் தோல் எப்படி யிருக்கும்?
5. பழங்களை ஏன் உண்ண வேண்டும்?
6. எப்படிப்பட்ட பழங்களைச் சாப்பிடக் கூடாது?

II. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமை.

1. பழங்கள் ——— இருக்கும்
2. ——— கொடியிலிருந்து கிடைக்கிறது.
3. வாழைப் பழத்தின் விலை ———
4. பலாபழத்தின் உள்ளே ——— இருக்கும்.
5. பழங்கள் ——— நல்லது.

III. எதிர்ப்பதங்களை எழுதுக.

இனிப்பு, எளிது, ஏழை, மலிவு, அடிமரம்.

IV. கீழுள்ளவை சரியா, தப்பா என்று எழுது:

1. திராக்ஷைப் பழம் கசக்கும்.
2. வாழைப் பழத்தின் விலை மலிவு.

3. அழுகின பழங்களைப் புசிப்பது நல்லது.
4. மாம்பழம் கொடியில் உண்டாகும்.
5. பலாச் சுளை இனிப்பாக இருக்கும்.

19. பருத்திச் செடி.

ஆடை	கரிசல்	முற்றின	பறித்தல்
பஞ்சு	விதை	கொஞ்சம்	உலரவைத்தல்
விளைதல்	முளைத்தல்	வெடித்தல்	நீங்கின

1. நாம் உடுக்கும் ஆடைகள் நூலால் நெய்யப் படுகின்றன. நூல் பஞ்சிலிருந்து நூற்கப் படுகிறது. பஞ்சு பருத்தியிலிருந்து கிடைக்கிறது. பருத்தி பருத்திச்செடியில் விளைகிறது.

2. பருத்திச் செடி கறுப்பு நிறமான நிலத்தில் விளையும். இதற்குக் கரிசல் நிலம் என்று பெயர். முதலில் நிலத்தைக் குடியானவர்கள்

உழுவார்கள். பிறகு நிலத்திற்கு எருப்போடு வார்கள். கொஞ்சம் மழை பெய்த உடனே பருத்தி விதைகளை விதைப்பார்கள்.

3. இந்த விதைகளிலிருந்து பருத்திச் செடிகள் முளைக்கும். சில மாதங்களில் அவை பூத்துக் காய்க்கும். முற்றின காய்கள் வெடிக்கும். அப்பொழுது உள்ளே இருக்கும் பருத்தி வெளியே வரும். அதைப் பறித்து வீடுகளுக்குக் கொண்டு வருவார்கள்.

4. இந்தப் பருத்தியை உலர வைப்பார்கள். பிறகு அதிலுள்ள கொட்டைகளை நீக்குவார்கள். கொட்டை நீங்கின பருத்திக்குப் **பஞ்சு** எனப்பெயர். பஞ்சிலிருந்து நூற்று ஆடைகளை நெய்வார்கள்.

I. கேள்விகள்.

1. **நமது ஆடைகள் எப்படிக் கிடைக்கின்றன ?**
2. **பருத்தி எப்படிப்பட்ட நிலத்தில் விளையும் ?**
3. **பருத்திச் செடியை எப்படிப் பயிர் செய்வார்கள் ?**
4. **பருத்தி எப்படி கிடைக்கிறது ?**
5. **கொட்டை நீங்கின பருத்திக்கு என்ன பெயர் ?**

II. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமை :

1. பருத்திச் செடி ——— நிலத்தில் வளரும்.
2. கொட்டை நீங்கின பருத்திக்குப் ——— எனப்பெயர்.
3. காய் ——— பருத்தி வெளியே வரும்.
4. ——— காய்கள் வெடிக்கும்.

20. நூல் நூற்றல்

தக்ளி	திரிமணை	சுற்றுதல்	சேர்த்தல்	இழுக்க
கதர்	முடியும்	சுலபமான	அங்குலம்	முறுக்கு
திரி	தடிப்பு	சுத்தம்	பழகப்பழக	கதிர்



1. பக்கத்திலுள்ள படத்தைப் பார். அது ஒரு **கதிர்**. அதைத் **தக்ளி** என்றும் சொல்லுவார்கள். தக்ளியால் நாம் நூல் நூற்கிறோம். ஆடைகள் இந்த நூலினால் நெய்யப்படுகின்றன.

2. நூல் நூற்றல் நல்ல தொழில். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரும் நூல் நூற்கலாம். இது ஒரு சுலபமான வேலை.

3. முதலில் பருத்தியிலிருந்து கொட்டைகளை நீக்கிச் சுத்தம் செய்யவேண்டும். சுத்தம் செய்த பஞ்சை வில்லால் நன்றாக அடிக்க வேண்டும். இதைத் திரி மணையில் வைத்து, சுமார் ஏழு அல்லது எட்டு

அங்குல நீளமுள்ள திரிகளாகச் செய்யவேண்டும். இந்தத் திரிகளிலிருந்து நூல் நூற்கிறோம்.

4. நாம் இடது கையில் திரியை வைத்துக் கொள்ளவேண்டும். கதிரில் கொஞ்சம் நூலைச்சுற்றித் திரியுடன் சேர்க்கவேண்டும். கதிரைச் சுற்றிவிட்டு, வலக்கையால் நூலை இழுக்கவேண்டும். பிறகு நூலுக்கு முறுக்கேற்ற வேண்டும். முதலில் நூல் தடிப்பாக இருக்கும். பழகப்பழக மெல்லிய நூலாக நூற்க முடியும். இந்த நூலிலிருந்து ஆடைகள் நெய்யப்படுகின்றன. கையால் நூற்ற நூலினால் நெய்யப்படும் ஆடைக்குக் **கதர்** என்று பெயர்.

5. கை ராட்டையாலும் நூல் நூற்பார்கள். ஒரு கையினால் ராட்டையைச் சுற்றிக்

கொண்டே, மற்ருெரு கையினுல் நூல் நூற்பார்கள். கை ராட்டைக்குச் **சர்க்கா** என்ற பெயரும் உண்டு.

I கேள்விகள் :

1. பருத்தியிலிருந்து திரிகளைச் செய்வது எப்படி?
2. கதிரினுல் எப்படி நூல் நூற்பார்கள்?
3. கதர் ஆடை என்ருல் என்ன?
4. 'சர்க்கா' என்ருல் என்ன?

II எதிர்ப்பதங்களை எழுது:

சுலபம், சுத்தம், தடிப்பு, முடியும்.

21. தேனீ

அடிக்கடி	மெழுகு	அமைக்கும்	பிரித்து
விரட்டுதல்	உமிழ்ந்து	உட்கொள்ளும்	தேன்

1. மேலே உள்ள படத்தைப் பார். ஒரு மரத்தில் ஒரு கூடு இருக்கிறதல்லவா? அது

ஒரு **தேன் கூடு**. அந்தக் கூட்டைச் சுற்றிப் பல ஈக்கள் இருக்கின்றன. அவை வீட்டு ஈக்கள் அல்ல ; அவை **தேனீக்கள்**.

2. தோட்டத்திலுள்ள பூக்களைப் பார். அவற்றில் அடிக்கடி தேனீக்கள் வந்து உட்காரும். பூக்களில் தேன் இருக்கும். தேனீக்கள் அந்தத் தேனை உட்கொள்ளும். பிறகு கூட்டில் அதை உமிழ்ந்துத் தேன் சேர்த்து வைக்கும்.

3. தேன் கூட்டைத் தேனீக்களே கட்டும். அது ஒருவகை மெழுகினுல் ஆனது. அந்த மெழுகு தேனீக்களின் உடம்பிலிருந்தே உண்டாகிறது. தேன் கூடு அழகாக இருக்கும். அதற்குள் பல சிறிய அறைகள் இருக்கும். அவற்றில் தேன் இருக்கும்.

4. மக்கள் தேனீக்களை விரட்டுவார்கள் ; பிறகு கூட்டைப் பிழிந்து தேன் எடுப்பார்கள். தேன் மெழுகையும் எடுத்து வைத்துக்கொள்வார்கள்.

5. தேனீக்கள் மரக்கிளைகளில் கூட்டை அமைக்கும். மனிதர்களும் தேனீக்களை வளர்ப்பார்கள். தேனீ வளர்த்தல் ஒரு நல்ல தொழில்.

6. தேன் இனிப்பாக இருக்கும். இதை மருந்துகளுடன் சேர்ப்பார்கள். தேன் நல்ல உணவுப் பொருள்.

I. கேள்விகள் :

1. தேனீக்கள் எப்படித் தேன் சேர்க்கின்றன?
2. தேன் மெழுகு எப்படிக் கிடைக்கிறது?
3. தேன் கூடு எப்படி இருக்கும்?
4. தேன் எப்படி எடுப்பார்கள்?
5. தேன் எப்படி உபயோகப்படுகிறது?

II. அறிந்துகொள்:—மருந்து = ஔஷதம் 'ஔ' என்ற எழுத்தைக் கவனி. சௌக்கியம், கௌதாரி, மௌனம், பௌவனம்—இந்தச் சொற்களைக் கற்றுக்கொள்.

22. ஆடிப் பாடல்



1. வா வா, மயிலே, வனக்குயிலே,
போவோம் காலை பூஞ்சோலை.

2. கொக் கொக் கோழி கூவுது பார்,
அக்குப் பட்சி அகவுது கேள்!

3. பார் பார் கிழக்கே பசுங் கதிரை!
சேர் சேர் மலர்க்கை சேவிப்போம்.

4. அன்பாயிருப்போம் அனைத்துயிர்க்கும்
பண்பாய் நடப்போம் பாருலகில்.

—யோகி சுத்தானந்த பாரதியார்.

23. பறவைகள்



காணலாம்	தானியம்	குஞ்சு
கத்தும்	ஆகாயம்	அதிகாலே
ஒற்றுமை	கொண்டை	சாது
பிரியம்		

1. காக்கைகளே எங்கும் காணலாம். காக்கை கறுப்பு நிறம். காக்கை அழுகின பொருள்களைத் தின்னும். அதனுல் தெருக்கள் சுத்தமாகும். காக்கை மரக்கிளைகளில் கூடு கட்டும். அது 'கா கா' என்று கத்தும். காக்கைகள் ஒற்றுமையாக இருக்கும்.

2. **குருவி** மிகச் சிறிய பறவை. அது தானியங்களைத் தின்னும். குருவி ஆகாயத்தில் அதிக உயரத்தில் பறக்கும்.

3. **கோழி**யைப் பலர் வீடுகளில் வளர்க்கிருர்கள். ஆண் கோழிக்குச் **சேவல்** என்று பெயர். சேவலுக்குக் **கொண்டை** உண்டு. பெட்டைக் கோழி முட்டை இடும். முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிப்படும். சேவல் அதிகாலையில் கூவும். கோழி அதிக உயரம் பறக்காது.

4. **மயில்** அழகான பறவை. ஆண் மயிலுக்கு நீண்ட **தோகை** இருக்கும். மயில் தோகையை விரித்து ஆடும்பொழுது, பார்க்க அழகாக இருக்கும். இது காடுகளில் வசிக்கும். இதுவும் அதிக உயரம் பறக்காது.

5. **புரு** சாதுவான பறவை. புருக்கள் கூட்டங் கூட்டமாக வசிக்கும். அவை தானியங்களைத் தின்னும். புருக்களைச் சிலர் பிரியமாக வளர்க்கிருர்கள். புரு உயரமாகப் பறக்கும். புருக்களில் பலவகை உண்டு.

6. **கிளி** அழகான பறவை. இதன் நிறம் பச்சை. இதன் மூக்கு சிவப்பு நிறம். இதன்

மூக்கை அலகு என்பார்கள். கிளி பாலும் பழமும் தின்னும். கிளியைப் பேசப் பழக்கலாம். அது நாம் சொன்னதையே திருப்பிச் சொல்லும்.

I. கேள்விகள் :

1. காக்கைகளால் உபயோகம் என்ன ?
2. ஆண் கோழியின் பெயர் என்ன ?
3. மயில் எப்பொழுது அழகாக இருக்கும் ?
4. புறக்கள் எப்படி வசிக்கும் ?
5. கிளி எப்படிப் பேசும்?

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. காக்கைகள் ——— இருக்கும்.
2. குருவி ——— தின்னும்.
3. சேவலுக்குக் ——— உண்டு.
4. மயில் அதிக உயரம் ———.
5. புறு ——— பறவை.
6. கிளி ——— பறவை.

24. மரங்கள்

வேம்பு	நீண்டு	காற்று	தங்கலாம்
குலை	பருமன்	சாலை	நல்லது
தணிக்கும்	அடர்ந்து	ஓரம்	பரந்து
ஊறுகாய்	தோப்பு		

1. மரங்களில் அநேக வகைகள் இருக்கின்றன. வாழை, மா, தென்னை, வேம்பு முதலியவை சில வகைகள். சில மரங்களின் பழங்களை நாம் சாப்பிடுகிறோம்.

2. வேப்பமரத்தை வேம்பு என்று சொல்லுவார்கள். வேப்பமரம் அழகாக இருக்

கும். அதன் அடிமரம் பருமனுக இருக்கும். அதன் கிளைகள் அடர்ந்தும் நீண்டும் இருக்கும். வேப்ப மரத்தைச் சாலை ஓரங்களில் நிழலுக்காக வைத்து வளர்க்கிறுர்கள். வேப்பிலைக் காற்று உடம்புக்கு மிகவும் நல்லது. வேப்பிலையை மருந்தாக உபயோகப்படுத்துவார்கள்.

3. ஆலமரம் அடர்த்தியாக வளரும். அதன் கிளைகள் பரந்து இருக்கும். ஆலமரத்தின் நிழலில் பல பேர் தங்கலாம். ஆலமரத்தின் விதை சிறியது; ஆனல் மரம் பெரியது.

4. மா மரம் மாம்பழங்களைக் கொடுக்கிறது. இது சித்திரை, வைகாசி மாதங்களில் காய்க்கும். மாங்காய்களை ஊறுகாய் போடுவார்கள். மாங்காய்களில் பலவகைகள் உண்டு. மா மரமும் கிளைகளுடன் அடர்ந்து நீண்டு இருக்கும்.

5. வாழை மரம் உயர்ந்து வளரும். அதற்குக் கிளைகள் இல்லை. வாழை மரம் எப்பொழுதும் காய்க்கும். ஒவ்வொரு மரமும் ஒரு குலை தான் தள்ளும். வாழைக்காயைச் சமைத்து உண்கிறேம்.

6. தென்னை மரம் நீண்டும் உயர்ந்தும் வளரும். இதற்குக் கிளைகள் இல்லை. முற்றுத

தேங்காயில் இளநீர் இருக்கும். இளநீர் இனிப்பாக இருக்கும்; தாகத்தைத் தணிக்கும். தேங்காயைக் கறி வகைகளுடன் சேர்க்கிறோம்.

7. நமது நாட்டில் எங்கும் மரங்களைக் காணலாம். சில மரங்கள் உயரமாகவும் சில குட்டையாகவும் இருக்கும். பல இடங்களில் மரங்கள் அடர்ந்த தோப்புகள் இருக்கும்.

I. எதிர்ப்பதங்களை எழுது:

நல்லது, நீளம், முற்றின, காய்.

II. தெரிந்து கொள்:

ஒன்று	பல
மரம்	மரங்கள்
காய்	காய்கள்
கிளை	கிளைகள்
அது	அது (அல்லது) அவைகள்

III. கேள்விகள்:

1. சில மர வகைகளைச் சொல்லு.
2. நிழல் தரும் மரங்களில் இரண்டு என்ன?
3. வேப்பிலையின் உபயோகம் எவை?
4. பழம் தரும் மரங்களில் இரண்டு எவை?
5. தென்னை மரத்திலிருந்து என்னென்ன கிடைக்கும்?

IV. சரியா, தப்பா சொல்லு.

1. தென்னை மரத்திற்குக் கிளைகள் உண்டு.
2. வாழை மரம் ஐம்பது அடி உயரம் வளரும்.
3. இளநீர் இனிப்பாக இருக்கும்.
4. ஆலமரத்தின் விதை பெரியது.
5. வேப்பமரம் அழகாக இருக்கும்.

25. கிராமம்.

கிராமம்	சுமார்	சாவடி	திருவிழா
ஆற்றங்கரை	ஜனங்கள்	பொது	கூலி
பிறந்தேன்	வசித்தல்	சந்தை	பிழைத்தல்
வயல்	கோபுரம்	வேண்டிய	

1. என் கிராமம் ஒரு ஆற்றங்கரையில் இருக்கிறது. இதில்தான் நான் பிறந்தேன். கிராமத்தை ஊர் என்றும் சொல்லுவார்கள். இதன் பெயர் **அரசூர்**.

2. அரசூரைச் சுற்றி வயல்கள் இருக்கின்றன. குடியானவர்கள் வயல்களில் பல

தானியங்களைப் பயிரிடுகிறார்கள். சிலர் காய் கறிகளையும் பயிரிடுகிறார்கள்.

3. என் கிராமத்தில் நான்கு தெருக்கள் இருக்கின்றன. இவற்றில் சுமார் நூறு வீடுகள் இருக்கின்றன; நானூறு ஜனங்கள் வசிக்கிறார்கள்.

4. என் கிராமத்தில் ஒரு கோவில் இருக்கிறது. அதற்குக் கோபுரம் உண்டு; ஆனால் அது சிறிய கோபுரம். இங்கே ஒரு பள்ளிக்கூடமும் இருக்கிறது. கோவிலுக்கு முன்னால் ஒரு சாவடி இருக்கிறது. சாவடிக்குப் பக்கத்தில் ஒரு பொதுவான கிணறு இருக்கிறது.

5. அரசூரில் வாரத்திற்கு ஒரு முறை ஒரு சந்தை கூடும். அதில் எங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக் கொள்வோம். கிராமக் கோவிலில் அடிக்கடி திருவிழாக்கள் நடக்கும்.

6. என் கிராமத்து ஜனங்கள் பயிர்த் தொழில் செய்கிறார்கள். சிலர் கூலி வேலை செய்து பிழைக்கிறார்கள்.

I கேள்விகள்:

1. உன் கிராமத்தின் பெயர் என்ன?
2. கிராமங்களில் என்னென்ன பயிரிடுகிறார்கள்?
3. அரசூரில் ஏன் சந்தை கூடுகிறது?
4. கிராம ஜனங்கள் செய்யும் வேலை என்ன?

TB
031 (2)
N50
132294
சென்னை-600 008.

II தெரிந்து கொள்:-

ஒன்று	பல	ஒன்று	பல
வீடு	வீடுகள்	திருவிழா	திருவிழாக்கள்
தெரு	தெருக்கள்	வயல்	வயல்கள்
பொருள்	பொருள்கள்	தானியம்	தானியங்கள்

III கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமை:–

1. கிராமத்தைச் சுற்றி வயல்கள் ———
2. குடியானவர்கள் ——— பயிரிடுகிறார்கள்.
3. கிராமத்தில் பள்ளிக்கூடம் ———
4. கோயிலுக்குக் ——— உண்டு.

26. மிருகங்கள்

மிருகங்கள்	புரை	மாமிசம்
வளர்க்கிறோம்	வெண்ணெய்	துதிக்கை
வாழ்கின்றன	தவிடு	தந்தம்
புல்பூண்டுகள்	சவாரி	உபயோகமானவை
இலைதழைகள்	நன்றியறிவு	அடங்கா
அடர்த்தியாக	காவல்	

1. நமது வீடுகளில் சில மிருகங்களை நாம் வளர்க்கிறோம். சில மிருகங்கள் காடுகளில் வாழ்கின்றன. நாய், பசு, ஆடு, எருமை, குதிரை முதலியவை **வீட்டு** மிருகங்கள்; புலி, கரடி, யானை, சிங்கம் முதலியவை **காட்டு** மிருகங்கள்.

2. ஆடுகளில் பலவகை உண்டு. ஆடுகளை மந்தை மந்தையாக வளர்ப்பார்கள். ஆடுகள்

புல்பூண்டுகளையும் இலைதழைகளையும்



தின்னும். வெள்ளாட்டின் பால் உடம்புக்கு நல்லது. செம்மறி ஆட்டின் உடம்பில் மயிர் அடர்த்தியாக இருக்கும். ஆட்டு மயிரினல் கம்பளங்கள் நெய்வார்கள்.

3. பசு சாதுவான மிருகம். பசு நமக்குப் பால் கொடுக்கிறது. பசுவின் பாலை நாம்

குடிக்கிறோம்; அது உடம்புக்கு நல்லது. பாலைக் காய்ச்சிப் புரை ஊற்றினல் தயிர் கிடைக்கும். தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பார்கள். வெண்ணெயைக் காய்ச்சினல் நெய் கிடைக்கும். பசு புல் தின்னும்; பருத்திக் கொட்டை தவிடு முதலானவைகளையும் பசு தின்னும்.

4. குதிரை வேகமாக ஓடும். குதிரை



வண்டி இழுக்கும். குதிரைக்குக் கொம்பு இல்லை. குதிரையின் மேல்உட்கார்ந்து நாம் சவாரி செய்யலாம். குதிரை கொள்ளும், புல்லும் தின்னும்.



5. நாய் நன்றி பறிவுள்ள பிராணி. நாய் தன் எசமானன் வீட்டை நன்ருகக் காவல் செய்யும். சில நாய்கள் தண்ணீரில் நீந்தும். நாய் பால், மாமிசம், சோறு முதலியவைகளைத் தின்னும்.



6. சிங்கம் மிருகங்களுக்கு எல்லாம் ராஜா. இது காட்டில் வர்ழும். இதற்குப் பிடரி மயிர் உண்டு.

சிங்கம் காட்டிலுள்ள மிருகங்களைக் கொன்று தின்னும்.

7. யானை மிகப் பெரிய மிருகம். இதன் முகத்தில் நீண்ட துதிக்கை இருக்கும். யானையின் காதுகள் முறம் போல் இருக்கும். யானைக்கு இரண்டு தந்தங்கள் உண்டு; அவை அதிக விலையுள்ளவை.



8. வீட்டு மிருகங்கள் நமக்கு மிகவும் உபயோகமானவை. காட்டில் வாழும் மிருகங்கள் நமக்கு அடங்கா; அவைகளைப் பிடித்து அடக்குவது கஷ்டம்.

I. கேள்விகள் :

1. வீட்டு மிருகங்கள் எவ்வெவை?
2. காட்டு மிருகங்கள் என்னென்ன?
3. ஆடுகளால் என்ன உபயோகம்?
4. பசுவின் உணவு என்ன?
5. நாய் எப்படிப்பட்ட பிராணி?
6. யானையின் காதுகள் எப்படி இருக்கும்?

II. கோடிட்ட இடங்களில், கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களில் பொருத்தமானவற்றை அமை.

1. பசு நமக்குப்——கொடுக்கிறது. (பழம், தயிர், பால்)
2. தயிரைக் கடைந்து——எடுப்பார்கள். (எண்ணெய், நெய், வெண்ணெய்)
3. ஆட்டு மயிரினல்——நெய்யலாம். (துணி, கம்பளம், பட்டு)
4. குதிரை——தின்னும். (நெல், கொள்ளு, பருத்திக் கொட்டை)

III. கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை அமை:

ஒன்று	பல
கம்பளம்	———
———	மிருகங்கள்
———	காடுகள்
தந்தம்	———

27. பசுவும் கன்றும்

1. தோட்டத்தில் மேயுது
வெள்ளைப்பசு—அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி.

2. அம்மா என்குது
வெள்ளைப் பசு—உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக் குட்டி.



3. நாவால் நக்குது
வெள்ளைப் பசு—பாலை
நன்றாய்க் குடிக்குது
கன்றுக் குட்டி.

—தேசிகவிநாயகம் பிள்ளை

28. தபால்காரன்

தபால்காரன்	செலவு	வெவ்வேறு	வீடுதோறும்
கடிதம்	சீக்கிரம்	விலாசம்	ஆவல்
செய்தி	தூரம்	தனி	எதிர்பார்த்தல்
அனுப்பி	மார்க்கம்		

1. பக்கத்தில் உள்ள படத்தைப் பார். இவன் ஒரு தபால்காரன். இவன் வேலை என்ன? இவன் ஒவ்வொரு வீட்டுக்கும் கடிதங்களைக் கொண்டு போய்க் கொடுப்பான்.

2. முன் காலத்தில் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குச் செய்திகளை ஆள் மூலமாக அனுப்பி வந்தார்கள். ஆள் நடந்துபோவான்; அல்லது குதிரையின் மேல் சவாரி செய்து கொண்டு போவான். இதற்குச் செலவு அதிகம்; சீக்கிரமாகவும் வேலை நடக்காது. ஆனால் இப்பொழுது, குறைந்த செல

வில் வெகு தூரத்திலுள்ள இடங்களுக்குக் கூடச் சீக்கிரமாகச் செய்திகளை அனுப்பலாம். நாம் எழுதும் கடிதங்களைத் தபால் ஆபீசில்



சேர்த்து ரயில் மார்க்கமாக வெவ்வேறு ஊர் களுக்கு அனுப்புகிறார்கள்.

3. ஒவ்வொரு ஊரிலும் உள்ள தபால் காரர்கள் கடிதங்களை அந்த விலாசம் உள்ளவர் களிடம் கொடுக்கிறார்கள். கடிதங்களைப் படித்து நாம் செய்திகளை அறிகிறோம்.

4. தபால்காரனுக்குத் தனி உடை உண்டு. தூரத்தில் வரும்பொழுதே தபால்காரனை நாம் கண்டு பிடிக்கலாம். வீடு தோறும் அவன் சென்று கடிதங்களைக் கொடுப்பான். எல்லோ

ரும் தபால்காரனை ஆவலுடன் எதிர்பார்ப் பார்கள்.

5. தபால் கார்டின் விலை முக்காலணா; கவரின் விலை இரண்டணா. இவற்றில் செய்தி களை எழுதவேண்டும், தபால் பெட்டியில் போடவேண்டும்.

I. கேள்விகள் :

1. தபால்காரனுடைய வேலை என்ன?
2. முன் காலத்தில் செய்திகளை எப்படி அனுப்பி வந்தார் [கள்?
3. இப்பொழுது எப்படிச் செய்திகளைச் சீக்கிரம் அனுப்பு கிறோம்?
4. தபால்காரனை ஏன் எல்லோரும் எதிர்பார்ப்பார்கள்?
5. கார்டு, கவர் விலை என்ன?

II. எதிர்ப் பதங்களை எழுது:

சீக்கிரம், குறைவு, தூரம், போவான்.

29. பொங்கல் பண்டிகை.

கொண்டாடுகிருர்கள்	தோரணம்	சந்தோஷம்	மகிழ்ச்சி
ஒவ்வொரு	அலங்காரம்	கூச்சல்	அறுவடை
பழுது பார்த்தல்	வணங்கு	படைத்தல்	விசேஷம்

1. நாம் வாழும் நாடு தமிழ் நாடு. தமிழ் நாட்டில் தமிழர்கள் வாழ்ந்து வருகிருர்கள். தமிழர்கள் அநேக பண்டிகைகளைக் கொண்டாடுகிருர்கள். அவற்றில் பொங்கல் பண்டிகை முக்கியமானது.

2. பொங்கல் பண்டிகை ஒவ்வொரு வருஷமும் தை மாதம் முதல் தேதி யன்று வரும். அன்று வீடுகளைச் சுத்தம் செய்வார்கள்; வீடுகளுக்குச் சுண்ணும்பு அடிப்பார்கள்; வீடுகளைப் பழுது பார்ப்பார்கள்; அழகான கோலங்கள் போட்டும் தோரணங்கள் கட்டியும் அலங்கரிப்பார்கள்.

3. பொங்கலுக்கு முதல் நாள் போகிப் பண்டிகை. சூரியனால் மழை பெய்கிறது. மழை இல்லாவிட்டால் பயிர் விளையாது. ஆகையால் நாம் பொங்கல் தினத்தன்று சூரியனை வணங்குகிறோம். வீட்டில் பொங்கல் செய்வார்கள். பொங்கல் பொங்கி வரும்போது 'பொங்கலோ பொங்கல்' என்று சந்தோஷமாகக் கூச்சல் போடுவார்கள். பொங்கலுடன் வேறு தின்பண்டங்களும் செய்வார்கள். முதலில் இவற்றைச் சூரியனுக்குப் படைப்பார்கள்; பிறகு எல்லோரும் உண்பார்கள்.

4. பொங்கல் பண்டிகைக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல். அன்று மாடுகளை நன்ருகக் குளிப்பாட்டி அலங்கரிப்பார்கள். அவைகள் சௌக்கியமாக இருக்க வேண்டும் என்று பொங்கல் இடுவார்கள். மாலை நேரத்தில் மாடு

களை வீதிகளில் வண்டிகளிலும் தனியாகவும் ஓடவைத்து மகிழ்ச்சி அடைவார்கள்.

5. நிலங்களில் இருந்து தானியங்கள் அறுவடையானதும் பொங்கல் பண்டிகை வருகிறது. தமிழர்களுக்குப் பொங்கல் ஒரு விசேஷமான பண்டிகை. அன்று எல்லோரும் புது ஆடைகள் உடுப்பார்கள். அந்த நாட்களில் நாடு முழுதும் மக்கள் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.

I. கேள்விகள் :

1. தமிழர்களின் முக்கியமான பண்டிகை எது?
2. பண்டிகையன்று வீடுகளுக்கு என்ன செய்வார்கள் ?
3. பொங்கல் பண்டிகை ஏன் கொண்டாடுகிறோம் ?
4. பண்டிகையை எப்படிக் கொண்டாடுவார்கள் ?
5. மாட்டுப் பொங்கலன்று என்ன செய்வார்கள் ?

II. கீழே ஒரு விளம்பரம் இருக்கிறது. இதை மௌனமாகப் படி.

"பொங்கல் பண்டிகை – ஆடைகள்."

எங்கள் கடையில் பல நிறங்களில் புது ரகச் சேலைகள், வேஷ்டிகள், துண்டுகள், கைக்குட்டைகள் முதலானவை கிடைக்கும். கெட்டிச் சாயம். உயர்ந்த ரகம். இன்றே வாருங்கள். விலை மலிவு.

"லலிதா ஹால், மவுண்டரோட், மதராஸ்."

1. இங்கே என்னென்ன ஆடைகள் கிடைக்கின்றன ?
2. ஆடைகளின் விலை எப்படி ?
3. இந்தக் கடையின் விலாசம் என்ன ?

III. தமிழ் மாதங்களை வரிசையாக எழுது.

30. பயிர்த் தொழில்



நடைபெறுகின்றன	நன்செய்	ஏரு
உழவர்	புன்செய்	தூவுதல்
ஆகையால்	பாய்ச்சி	களை
களம்	மேலான	இழிவான

1. நமது நாட்டில் பல தொழில்கள் நடைபெறுகின்றன. அவைகளில் பயிர்த்தொழிலும் ஒன்று ஆகும். நிலத்தில் பல தானியங்களைப் பயிர் செய்தாலே பயிர்த்தொழில். பயிர் செய்கிறவர்களுக்குக் குடியானவர்கள் என்று

பெயர். இவர்களை **உழவர்** என்றும் சொல்லு வார்கள்.

2. பயிர்த் தொழில் இல்லாவிட்டால் நமக்கு உணவுப் பொருள்கள் இல்லை. பயிர்த் தொழில் முக்கியமான தொழில்.

3. நிலங்களில் இரண்டு வகைகள் உண்டு. அவை **நன்செய், புன்செய்** எனப்படும். ஆற்றி லிருந்தும், குளத்திலிருந்தும், ஏரியிலிருந்தும் தண்ணீர் பாய்ச்சிப் பயிர் செய்யப்படுவது நன் செய். மழைத் தண்ணீரின் உதவியால் பயிர் செய்யப்படும் நிலம் புன்செய். நன்செய் நிலத் தில் நெல் பயிர் செய்வார்கள். புன்செயில் கம்பு, கேழ்வரகு முதலியவைகளைப் பயிர் செய் வார்கள்.

4. முதலில் உழவர் கள் நிலத்தை உழுவார் கள். உழுத நிலத்தில் எரு இடுவார்கள்; பிறகு விதைகளைத் தூவுவார் கள். நெல்லை நாற்று விட்டுப் பிறகு பிடுங்கி நடுவார்கள். பயிர் முளைத்தபின், பல புல்

பூண்டுகள் தோன்றும். அவைகளுக்குக் **களைகள்** என்று பெயர். அவற்றை அடிக்கடி பிடுங்கி எறிய வேண்டும். கதிர்கள் முற்றிய பின் கதிர்களை அறுப்பார்கள். இதுவே **அறுவடை** எனப்படும்.

5. கதிர்களைக் களத்தில் சேர்ப்பார்கள். அங்கே அவற்றை அடித்து மணிகளைப் பிரிப்பார்கள். பிறகு தானியத்தை வீடுகளுக்குக் கொண்டு போவார்கள்.



6. கலப்பை, மண்வெட்டி, களைக்கொத்து, அரிவாள் முதலானவை பயிர்த் தொழிலுக்கு வேண்டிய கருவிகள். பயிர்த் தொழில் மேலான தொழில். இழிவாக அதைக் கருதக் கூடாது.

I. கேள்விகள்:-

1. உழவர்கள் யார்?
2. பயிர்த்தொழில் ஏன் முக்கியமானது?

3. நிலங்கள் எத்தனை வகைப்படும்? அவை என்னென்ன?
4. அவைகளில் என்னென்ன பயிர் செய்யலாம்?
5. களை எடுத்தல் என்றால் என்ன?

II. பொருத்தமான சொற்களைச் சேர்:-

பனை	பயிர்
வாழை	காடு
பலா	தோட்டம்
நெல்	தோப்பு

III. கீழே கண்டவைகளைப் பல பொருள்களாக எழுது:-
நிலம், களை, தொழில், கதிர், தானியம்.

31. வால் இழந்த நரி

வெள்ளரி	தெரிந்தது	தப்பி ஓட	உபயோகம்
நிறைய	பொறி	அறுந்து	நண்பன்
திருடி	இராத்திரி	விட்டு விட்டு	அறுத்து
விஷயம்	அகப்பட்டு	தந்திரம்	சரி
தேவை	முட்டாள்	கேலி	ஒளிந்து

1. ஒரு குடியானவன் ஒரு வெள்ளரித் தோட்டம் போட்டிருந்தான். அதில் நிறைய வெள்ளரிப் பழங்கள் இருந்தன.

2. ஒரு நாள் நரி அந்தத் தோட்டத்தின் வழியே போயிற்று. வெள்ளரிப் பழங்களை அந்த நரி பார்த்தது. அது தினம் ஒரு பழமாகத் திருடித் தின்றது.

3. குடியானவனுக்கு இந்த விஷயம் தெரிந்தது. தோட்டத்தில், அவன் ஒரு பொறி

யை வைத்தான். அந்த இராத்திரி நரி அந்தப் பொறியில் அகப்பட்டுக் கொண்டது!

4. நரி பொறியில் இருந்து தப்பி ஓடப் பார்த்தது. ஆனால் அதன் வால் அறுந்து விட்டது! பொறியில் வாலை விட்டு விட்டு நரி ஓடிப் போய் விட்டது!

5. வால் இழந்த நரி ஒரு தந்திரம் செய்தது. காட்டிலுள்ள நரிகளை எல்லாம் கூப்பிட்டது. 'நண்பர்களே! இந்த வாலினால் நமக்கு

ஒன்றும் உபயோகம் இல்லை. ஆகையால் என் வாலை நான் அறுத்துக் கொண்டேன். நீங்களும் உங்களுடைய வால்களை அறுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிற்று.

6. குட்டி நரிகள் அது கேட்டு "ஆமாம். நீ சொல்வது சரியே. வால் நமக்குத் தேவை இல்லை" என்றன. ஆனால் ஒரு கிழ நரி வால் இழந்த நரியைப் பார்த்து "தம்பி! உன் வால் எங்கே? எந்தப் பொறியில் விட்டு விட்டாய்? உன்னைப் போல் செய்ய நாங்கள் முட்டாள்கள் அல்ல" என்று சொல்லிற்று.

7. வால் இழந்த நரியைப் பார்த்து எல்லா நரிகளும் கேலி செய்தன. வால் இழந்த நரி காட்டிற்குள் ஓடி ஒளிந்து கொண்டது.

I. கேள்விகள்:–

1. நரி தோட்டத்தில் என்ன செய்தது?
2. குடியானவன் நரியைப் பிடிக்க என்ன செய்தான்?
3. நரிக்குப் பொறியில் என்ன நேரிட்டது?
4. நரி செய்த தந்திரம் என்ன?
5. கிழ நரி என்ன சொல்லிற்று?
6. நரி என்ன செய்தது?

II. நரியைப் பற்றி வேறு ஒரு கதையைச் சொல்லு.

32. கிளி

1. பச்சைக் கிளியே வா வா
   பாலும் சோறும் உண்ண வா
   கொச்சி மஞ்சள் பூச வா
   கொஞ்சி விளையாட வா!

2. கவலை எல்லாம் நீங்கவே
   களிப்பு எழுந்து பொங்கவே
   பவழ வாய் திறந்து நீ
   பாடு வாயோ தத்தம்மா!

3. வட்டமாய் உன் கழுத்திலே
வானவில்லே ஆரமாய்
இட்ட மன்னர் யாரம்மா ?
யான் அறியக் கூறம்மா.

4. பையப் பையப் பறந்து வா
பாடிப் பாடிக் களித்து வா
கையில் வந்து இருக்க வா
கனி அருந்த ஓடி வா.

—தேசிக விநயகம் பிள்ளை.

33. ஒற்றுமை

சேர்ந்து	அருகே	பயந்து	தனித்தனியாக
மேய்தல்	கோபம்	கலைந்து	எதிர்த்தல்
கொன்று	முட்டுதல்	ஒற்றுமை	
ஆசை	பாய்தல்	மறைந்து	

1. ஒரு காட்டில் நான்கு எருதுகள் வாழ்ந்து வந்தன. அவைகள் எங்கே போனா லும் சேர்ந்தே மேயும்.

2. அந்தக் காட்டில் ஒரு சிங்கம் இருந்தது. ஒரு நாள் அச் சிங்கம் அந்த எருதுகளைக் பார்த்

தது. அது அந்த எருதுகளைக் கொன்று தின்ன

வேண்டும் என்றும் ஆசை கொண்டது. அதனால், ஒரு நாள் சிங்கம் எருதுகளின் அருகே சென்றது.

3. சிங்கத்தைக் கண்ட எருதுகள் கோபம் கொண்டன. நான்கு எருதுகளும் சிங்கத்தைத்

திரும்பிப் பார்த்தன. தங்களுடைய கொம்பு களால் முட்டுவதற்குச் சிங்கத்தின்மேல் பாய்ந்

தன. அதைக் கண்ட சிங்கம் பயந்து ஓடிப் போயிற்று.

4. சில நாட்களுக்குப் பின் எருதுகள் கலைந்து போயின. அவைகளுக்குள்ளே இருந்த ஒற்றுமை மறைந்து விட்டது. அதனால் அவை தனித்தனியாக மேயச் சென்றன.

5. எருதுகள் தனித்தனியாக மேய்வதைச் சிங்கம் கண்டது. மறுபடியும் சிங்கம் எருது



களைத் தனித்தனியாக எதிர்த்தது; ஒவ்வொன் ருக அடித்துக் கொன்று தின்றது.

I. கேள்விகள்:-

1. எருதுகள் எப்படி வாழ்ந்து வந்தன?
2. சிங்கத்திற்கு என்ன ஆசை உண்டாயிற்று?
3. சிங்கம் ஏன் பயந்து ஓடிற்று?
4. எருதுகள் ஏன் தனித்தனியே மேய்ந்தன?
5. சிங்கம் எப்படி எருதுகளைக் கொன்றது?

II. எதிர்ப் பதங்களை எழுது:-

அருகே, சேர்ந்து, ஆசை, ஒற்றுமை.

34. நமது உடல்

உடல்	உறுப்புகள்	சுவாசித்தல்	அவசியம்
பாகம்	வாசனை	ஜீரணித்தல்	மூளை
முக்கியம்	அறிவு	பத்திரமாக	அறிகிறோம்
உறுதி	கருவி	பாதுகாத்தல்	

1. நமது உடலில் மூன்று பாகங்கள் இருக்கின்றன. அவை தலை, உடல், கைகால்கள் என்பவைகளாம்.

2. இவற்றில் தலை முக்கியமான பாகம். தலை மிகவும் உறுதியானது; ஒரு பெட்டிபோல் உள்ளது. தலையில் கண்கள், காதுகள், மூக்கு, வாய், மூளை ஆகிய முக்கியமான உறுப்புக்கள் இருக்கின்றன.

3. கண்களால் நாம் பார்க்கிறோம். காதுகளால் நாம் கேட்கிறோம். மூக்கினல் வாசனை அறிகிறோம். நாம் வாயினல் பேசுகிறோம்; சாப்பிடுகிறோம். மூளையினல் நமக்கு அறிவு உண்டாகிறது. நாக்கினல் நாம் சுவை அறிகிறோம்.

4. நமது உடலுக்குள்ளே சில முக்கியமான கருவிகள் இருக்கின்றன. அவற்ருல் நாம் சுவாசிக்கிருேம்; உணவை ஜீரணிக்கிருேம். இவைகளே நாம் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

5. நாம் கைகளால் வேலே செய்கிருேம். கால்களால் நடக்கிருேம். நமது உடலில் உள்ள உறுப்புக்கள் எல்லாம் நமக்கு அவசியமானவை. அவற்றை நாம் நன்ருகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். உறுப்புக்கள் எல்லாம் வேலே செய்தால் தான் நமது உடல் சௌக்கியமாக இருக்கும்.

I. கேள்விகள்:–

1. நமது உடலின் பாகங்கள் யாவை?
2. தலேயில் உள்ள உறுப்புக்கள் என்ன?
3. உடலில் உள்ள கருவிகளால் என்ன உபயோகம்?
4. நமக்குக் கைகால்கள் எதற்கு?
5. நாம் சௌக்கியமாக இருப்பது எப்படி?

II. சரியாக ஒன்று சேர்.

நாம் கண்களால்	வேலே செய்கிருேம்
நாம் கால்களால்	பேசுகிருேம்
நாம் கைகளால்	பார்க்கிருேம்
நாம் வாயினுல்	வாசனே அறிகிருேம்
நாம் மூக்கினுல்	சாப்பிடுகிருேம்

III. கீழுள்ளதை மௌனமாகப் படித்துச் செய்.

கைகளே நீட்டு. வாயைத்திற. கால்களே மடக்கு. உட்கார். இடது கையை மேலே தூக்கு. வலது கையை நீட்டு. வாயைக் காட்டு. எழுந்து நில். கதவைத்திற. கதவை மூடு.

35. உலகநீதி

1. ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.
2. மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
3. கற்றவரை ஒரு நாளும் பழிக்க வேண்டாம்.
4. போகாத இடந்தனிலே போக வேண்டாம்.
5. நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்.
6. வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.
7. அஞ்சாமல் தனி வழியே போக வேண்டாம்.
8. நஞ்சுடனே ஒரு நாளும் பழக வேண்டாம்.
9. மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்.
10. அடுத்தவரை ஒரு நாளும் கெடுக்க வேண்டாம்.

36. ஆத்திசூடி

1. அறம் செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. ஊக்கமது கைவிடேல்
6. எண் எழுத்து இகழேல்
7. ஐயம் இட்டு உண்
8. ஒதுவது ஒழியேல்
9. நன்றி மறவேல்
10. இளமையில் கல்

ஆவணக்காப்பக நூலகம்
சென்னை-600 008

37. நாட்டுவாழ்த்து

வாழ்க வாழ்க உலகெலாம்
வாழ்க எங்கள் தேசமும்
வாழ்க எங்கள் தமிழகம்
வாழ்க நல்ல அரசியல்;
அன்பு கொண்டு அனைவரும்
அச்சம் இன்றி வாழ்கவே.

—நாமக்கல் கவிஞர்.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008. 132294

குடியரசு தமிழ் வாசகம்

இரண்டாம் புத்தகம்

இரண்டாம் வகுப்புக்குரியது

வீ. இ. சேஷாத்திரி, பீ. ஏ., எல். டி., எழுதியது.

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு ஸன்ஸ்

சென்னை-1.

காபிரைட்]

[விலை அணா 6.